**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: *94890 56730*

தொலைபேசி: *0422 - 6611302*
நிகரி: *0422 - 2431821*
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி:*11.01.2024*
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வடிவமைப்பு காப்புரிமை**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், முருங்கை விதை தோல் நீக்கும் இயந்திரத்திற்கான வடிவமைப்பு காப்புரிமையை மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் காப்புரிமைகள், வடிவமைப்புகள் மற்றும் வர்த்தக முத்திரைகளின் கட்டுப்பாட்டாளர் தலைமை அலுவலகத்தால் பெற்றுள்ளது. கோயம்புத்தூரில் உள்ள வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் உணவு பதன்செய்முறை பொறியியல் துறையின் முதுகலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களால் இந்த இயந்திரம் உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் இந்த இயந்திர வடிவமைப்பு காப்புரிமை பெற்றவர்களுக்கு முதன்மையர், வேளாண் பட்ட மேற்படிப்பு மற்றும் முதன்மையர், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஆகியோர் முன்னிலையில் காப்புரிமைச் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**